# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (11.06.2022 முதல் 15.06.2022 )

**அறிக்கை எண் 046/2022** **தேதி.10.062022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (0506.2022 முதல் 09.06. 2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 15.06.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05/06 | 06/06 | 07/06 | 08/06 | 09/06 | தேதி | நாள் -1 11/06 | நாள்-2 12/06 | நாள்-3 13/06 | நாள்-4 14/06 | நாள்-5 15/06 |
| 0.0 | 3.3 | 11.4 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 4 | 0 | 0 |
| 35 | 35 | 34 | 31 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 36 | 36 |
| 25 | 25 | 25 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 6 | 7 | 7 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 3 | 3 |
| 78 | 73 | 78 | 79 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 64 | 65 | 57 | 61 | 53 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| 24 | 12 | 21 | 22 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 12 | 12 | 12 |
| 200 | 230 | 200 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (11.062022 முதல் 15.06.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த வரும் 12.06.22 மற்றும் 13.06.22 ஆகிய தேதியில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழை எதிர் பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதுடன் பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் நீர் ஆவியாதல் தடுக்கப்படும். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் சமீபத்தில் நெல் விதைத்திருந்தால் நாற்றாங்காலில் மாலை அல்லது மழை வரும் சமயங்களில் சிறிதளவு தண்ணீர் தேக்குவதன் மூலம் விதைத்த நெல் இடம் மாறுவது தடுக்கப்பட்டு முளைப்புத்திறன் அதிகப்படுத்தலாம்.<br>பெய்துள்ள மழையை பயன்படுத்தி வாய்கால் பாசனப்பகுதிகளில் ஆகஸ்ட் மாதத்தில் நெல் நடவு செய்யும் விரும்பும் விவசாயிகள் தக்கை பூண்டு கொழிஞ்சி, சணப்பை போன்ற பசுந்தாள் உரங்களை விதைத்து 45 நாட்கள் கழித்து அந்த இடத்திலே உழுவதன் மூலம் மண்ணின் அங்கத்தன்மையை அதிகப்படுத்தலாம். |
| பருத்தி | பூக்கும் மற்றும் காய் பருவம் | கோடை கால இறவை பருத்தியில் பூ உதிர்வை தடுத்து காய் பிடித்தலை அதிகரிக்க என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கியை 40 பிபிஎம் (40 மில்லி கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில்) கலந்து தெளிக்கவும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 8-12 கிமீ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இடவும்.<br>குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்கவும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்கலாம். |
| கால்நடைகள் | | மழையுடன் மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழையுடன் காற்றின் வேகம் 8-12 கிமீ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**